இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -21 வெற்றி -07


# நேர்மை நெறி


ஜூலை 2023

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)


## (NERMAI NERI)


(Reg.No.349/2001)


கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி

₹ 10

**ஊழல் என்பது மறைந்திருக்கும் கொள்ளையன்**

**24 மணி நேரமும் நம்மை கொள்ளையடிக்கிறது**




## ஊழல் நம் நாட்டின் சாபம்


**PUBLISHED BY**

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அயனாபுரம், சென்னை-600023
தொலைபேசி எண்: 044 2674 1007

e-mail : acmchennai2001@yahoo.co.in

website : anticorruptionchennai.com


ஊழல் எதிர்ப்பு இயக்கம்
ANTI-CORRUPTION MOVEMENT

**<u>நேர்மையானவர்கள் வாழ்வில் சில சம்பவங்கள்</u>**

## எது மனித சக்தி?

ஒரு சமயம் யோகி ஒருவர் சுவாமி விவேகானந்தரிடம் வந்தார். அவர் விவேகானந்தரிடம், "ஐயன்மீர்! எனக்கு ஆகாயத்தில் பறக்கும் சக்தி இருக்கிறது. பூமிக்குக் கீழே நீண்ட நேரம் புதையுண்டு மூச்சை அடக்கும் சக்தி இருக்கிறது. தண்ணீருக்குள் அதிக நேரம் மூழ்கியிருக்கும் அபரிதமான சக்தியும் இருக்கிறது. இவையெல்லாம் பெருமைக்கான விஷயங்கள் தாமே!" என்று ஆவலுடன் கேட்டார்.

விவேகானந்தர் அந்த யோகியைக் கூர்ந்து பார்த்தார். பேச்சில் மட்டுமல்ல; அவரது கண்களிலும் அகந்தை சுடர் விட்டது.

அதை அழிக்க நினைத்த விவேகானந்தர். " ஐயனே! பாருங்கள்... பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன. புழுக்கள், விஷ ஜந்துக்கள் போன்றவை பூமிக்கடியில் நீண்ட காலம் வாழுகின்றன. மீன்கள் தண்ணீருக்குள்ளே பிறந்து வாழ்கின்றன. இவையெல்லாம் எனக்கும் சாத்தியம் என்கிறீர்கள். அப்படிப்பட்ட அற்ப ஜந்துக்கள் போல் தான் இப்போது நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால், அதனால் உங்களுக்கு என்ன பயன்?" என்று கேட்டார்.

யோகி விழித்தார். பறப்பதால், பூமிக்கடியில் மூச்சை அடக்குவதால் நீங்கள் அடையப்போகும் இலாபம் என்ன? யோகி தொடர்ந்து விழித்தார்.

விவேகானந்தர் புன்னகைத்து, "உலகில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ உள்ளன. கருணை போன்ற நற்குணங்களை விருத்தி செய்ய வேண்டும். அகந்தை போன்ற தீய குணங்களை விட்டொழிக்க வேண்டும். இவற்றை விட்டு விட்டு பறப்பதாலும், மூச்சை அடக்குவதாலும் யாதொரு பயனும் இல்லை!" என்றார்

"உலகிலேயே நான் தான் வஸ்தாது" என்று அகந்தை கொண்டிருந்த அந்த யோகி, விவேகானந்தரின் விளக்கத்தை கேட்டு வெட்கித் தலை குனிந்தார்.

---

**<u>குறிப்பு:</u> தவிர்க்க முடியாத காரணத்தால் தலைவர் மடல் பிரசுரம் ஆகவில்லை: அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்**

---



# இனி நமக்குத் தேவை அடிப்படை மாற்றம்

வே. கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

இன்றைய அரசாங்கம் யார் ஆட்சி செய்தாலும், அது மக்களை குறிப்பாக ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கின்றது. கடந்த 76 ஆண்டு கால ஆட்சியில் யார் மேம்பாடு அடைந்தனர் என்பதை சாதாரணமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் இந்த உண்மை நமக்குப் புரிந்துவிடும். இதற்கு ஒரு ஆதாரத்தைத் தந்தால் நாம் புரிந்து கொள்வதற்கு மிகவும் சுலபமாக இருக்கும்.

சமீபத்தில் ஒரு ஐ.நா.நிறுவனத்தின் விழா ஒன்றில் காணொளிக் காட்சி மூலம் பேசிய நம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்தார். அது ஒரு மெய்யான புள்ளி விவரம் தான். அதாவது இந்தியாவில் உள்ள குடும்பங்களில் உள்ள 80 கோடி மக்களுக்கு இந்த ஊரடங்கு காலத்தில் உணவு வழங்கி, பசியிலிருந்து அவர்களை பாதுகாத்து இருக்கின்றோம் என்று கூறியதுதான். இந்தப் பிரகடனம் என்ன செய்தியை நமக்கு விளக்குகின்றது.

இந்தியாவில் உள்ள 138 கோடி மக்களில் 80 கோடி மக்கள் விளிம்பு நிலையில் வாழ்கின்றார்கள். அரசாங்கத்தின் உதவியின்றி அவர்களுக்கு உணவு பாதுகாப்பு கிடைக்காது என்பதுதான். இன்னொரு புள்ளி விவரத்தை முன் வைத்தால் இந்திய வளர்ச்சிப் பாதை யாருக்குச் சாதகமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்தியா பொருளாதார வளர்ச்சியில் 8 சதவிகிதத்தை எட்டியபோது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை உருவாக்கி குறைந்தது 100 நாட்களுக்கு வேலை வேண்டும் என்று கூறிவரும் கிராமத்துக் குடும்பங்களுக்கு பணி தர வேண்டும், என ஒரு சட்டம் இயற்றி கிராமங்களிலிருந்து வாழ்வாதாரம் தேடி நகரத்துக்குச் சென்று பிழைப்பைத் தேடும் சூழலை மாற்ற மத்திய அரசு முனைந்தது எதைக் காட்டுகிறது? நீங்கள் அடைந்த பொருளாதார வளர்ச்சி ஏழையின் வாழ்வில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்ற உண்மையைத்தான். இன்னும் ஒருபடி மேலே சென்று ஒரு புள்ளி விவரத்தைத் தந்தால் நம் அரசும், கொள்கைகளும், திட்டங்களும் யாரை கைதூக்கி விட்டிருக்கிறது என்பது புரியும்.

நம் கம்பெனி முதலாளிகளுக்கு தங்கள் கம்பெனிகளில் பணியாற்றியவர்கள் சக மனிதர்கள் என்ற எந்த உணர்வும் அற்று செயல்பட்டு அவர்களை அற்ப உயிரினமாகப் பார்த்து நடத்தியதுதான் நம் வளர்ச்சி வரலாற்றில் ஒரு சோக நிகழ்வு. இப்படிப்பட்ட சூழல்தான் உருவாகப் போகிறது என்பதை 100 ஆண்டுகளுக்கு முன் காந்தி மிகவும் தெளிவுபட நம் தலைவர்களிடம் எடுத்துக் கூறினார் தன் கொள்கைப் பிரகடனமான இந்து சுயராஜ்யத்தின் மூலம்.

இந்தியா வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் பெறுவது எளிதானது. அதைவிட மிக முக்கியமாக வெள்ளைக்காரத் தனத்திலிருந்து நம் மக்களை விடுவிப்பதுதான் கடினமான பணி அந்தப் பணியைச் செய்வதுதான் சுயராஜ்யத்திற்கான பணி என்று விளக்கினார். அவர் அடிப்படையில் வெள்ளைக்காரர்களிடமிருந்து இந்தியா விடுதலை அடைவதை முழுச் சுதந்திரம் என்பதாகப் பார்க்கவில்லை. சுதந்திரம் என்பது வெள்ளைக்கார ஆட்சிமுறை, வெள்ளைக்கார பொருளாதார முறை, வெள்ளைக்கார நிர்வாகம், வெள்ளைக்கார வாழ்வு முறை இவைகள் அனைத்திலிருந்தும் நம் மக்களை விடுதலை அடையச் செய்ய வேண்டும் அதுதான் இந்திய மக்கள் அனைவருக்குமான சுதந்திரமாக இருக்கும். அதுதான் சுயராஜ்யம் என்று பிரகடனம் செய்தார்.

இந்தப் பாதையில் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் நடைபோடவில்லை என்றால் வெள்ளையர்கள் இருந்த இடத்தில் நம்மவர்கள் இருந்து வெள்ளையர்கள் செய்ததையே இவர்களும் செய்து பெரும்பான்மையாக வாழும் இந்திய ஏழை மக்களைச் சுரண்டி வாழ்வார்கள் என்றார். ஆகையால்தான் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே இரண்டு இயக்கங்களை மகாத்மா காந்தி நடத்தி வந்தார்.

ஒன்று இந்தியாவை விட்டு வெள்ளையர்களை அகற்றுவது. இரண்டு இந்தியா தன்னை புனரமைத்துக் கொண்டு இந்திய வாழ்வு முறைக்குத் திரும்புவது. அந்த இந்திய வாழ்வு முறைக்குத் திரும்பும் நிகழ்வு முழுக்க முழுக்க இந்திய நாகரிக கலாச்சார பண்பாட்டின் பின்புலத்தில் நடைபெறவேண்டும் என்பதனையும் தெளிவுபடக் கூறினார். இந்திய நாகரிகத்தின் அடிப்படை என்பது கிராமிய வாழ்வில் மிளிர்ந்த விழுமியங்கள். எனவே இந்த

வாழ்க்கை முறையில் நம் நாகரிக கலாச்சார அடையாளங்களில் காணப்படுகின்ற பிற்போக்குத் தனங்கள் அகற்றப்பட்டு மற்ற கலாச்சாரங்களிலிருந்து ஒரு சில வாழ்க்கை நெறிமுறைகளை உள்வாங்கி இணைத்து ஒரு உயர்ந்த வாழ்வு முறையை உருவாக்கி வாழ மக்களுக்கு வழிகாட்டுதல் என்ற அடிப்படையைக் கொண்டு வந்தார் காந்தி.

அதை முற்றிலுமாக நிராகரித்தனர் மேற்கத்தியக் கல்வி பயின்ற மேற்கத்திய வாழ்வு முறையை உயர்வானது என்று கருதிய தலைவர்களுக்கு இந்தியா என்ற நாட்டை உருவாக்குவது, அதில் ஒரு வலுவான அரசைக் கட்டுவது, அதன் மூலம் அனைவருக்கும் பொருளாதார வளர்ச்சியை மேற்கத்திய வளர்ச்சி முறையில் கொண்டு வருவது என்ற அடிப்படையில் மேற்கத்திய அமைப்புக்களையும், அணுகுமுறைகளையும் தக்கவைத்து செயல்பட முனைந்தனர். இவர்கள்தான் இந்தியத் தலைவர்களில் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். மற்றுமொரு குழு காந்திய வழிமுறை மேற்கத்திய கலாச்சாரத்தையும் கிழக்கத்திய கலாச்சாரத்தையும் இணைத்த ஒரு ஒட்டுக்கட்டிய வழிமுறை, அது இந்திய வழிமுறை அல்ல, இதில் அடிப்படை இந்துத்வா சாரம் கிடையாது என விமர்சனம் செய்து நிராகரித்தனர்.

காந்தி மேற்கத்திய கிறித்துவ வாழ்வியலில் பலவற்றை உள்வாங்கி இந்திய வாழ்வு முறையில் உள்ள புனிதத்துவத்தை கெடுத்து விட்டார் என்று விமர்சனங்களை முன் வைத்து, மேற்கத்திய முறையை முழுமையாக ஆதரிப்பவர்களை விட மோசமான எதிரியாகக் காந்தியைப் பார்த்து விமர்சனத்தை வைத்து முற்றிலுமாக காந்தியை நிராகரித்தனர்.

காந்தியை உள்வாங்கிய காந்தியர்களோ அடித்துச் செல்லும் வெள்ளத்தில் சிக்கியவர்கள்போல் சுதந்திர இந்திய அரசாங்கச் செயல்பாடுகளைப் பார்த்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாக மாறி காந்திக்கு அஞ்சலியும் புகழாரமும் சூட்டுபவர்களாகவும் மாறி செய்வதறியாது ஒரு சில கிராமப் பணிகளில் ஈடுபட்டுச் செயல்பட்டதுடன் காந்தியை மிகப்பெரிய மக்கள் இயக்கமாக்க முடியாமல் போனது ஒரு துன்பியல் நிகழ்வு.

இந்தியா சுதந்திரமடைந்து இந்தியாவை அமைதிப்படுத்துவதற்கும், இந்தியா என்ற நாட்டை உறுதிப்படுத்துவதற்கும் செயல்பட்ட நம் ஆட்சியாளர்கள் தங்கள் செயல்பட்டு வரும் விதத்தில் பெரும்பான்மை மக்கள் பயன் பெறுகின்றார்களா என்பதைத் தொடர்ந்து கண்காணிக்கத் தவறவில்லை. காந்தியின் பாதையில் சுதந்திர இந்தியாவைக் கொண்டு செல்ல இயலவில்லை என்றாலும் காந்தியின் இலக்கை அடைய வேண்டும் என்று எண்ணினார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதற்கு மிக முக்கியமான சான்றுகள் உள்ளன.

சுதந்திரம் அடைந்தவுடனேயே நேரு அமைத்த கோர்வாலா குழு ஒரு அறிக்கையைத் தந்தது. அதில் பொதுவாழ்க்கைத் தூய்மை, ஒழுக்கமான பொதுவாழ்க்கை, ஊழலற்ற நடைமுறைகள் அரசியலில் ஆளுகையில், நிர்வாகத்தில் பேணப்பட வேண்டும் என்பதை எடுத்துக் கூறியது, இந்த அறிக்கை எனக் காட்டுகிறது என்றால் சுதந்திரமடைந்த உடனேயே நம் அரசியல்வாதிகளிடமும் ஆட்சியாளர்களிடமும், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சுயநலம் மேலோங்கி, ஊழல் செயல்பாடுகள் வெளிப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளது. இந்தச் சூழலை கடுமையாக நாம் எதிர்கொண்டு முறியடிக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என பரிந்துரை செய்தது இந்தக் குழுவின் அறிக்கை.

அதனைத் தொடர்ந்து நிர்வாகவியல் வல்லுனர் பால் ஆப்பல்பி தன்னுடைய நிர்வாகச் சீர்திருத்த அறிக்கையில் நேரு, அவர்களிடம் சமர்ப்பிக்கும்போது ஒன்றை தெளிவாக் குறிப்பிட்டிருந்தார். காலனியாதிக்க காலத்தில் உருவாக்கப்பட்ட நிர்வாக அமைப்பு பெருமளவு மக்களை மதித்து நடத்தாது, மாறாக அரசுக் கட்டிலில் உள்ளவர்களுக்கு மக்களைச் சுரண்டுவதற்கு வழிசெய்து கொடுத்துவிடும் என்ற எச்சரிக்கையை தன் அறிக்கையின் மூலம் சமர்ப்பித்தார். இந்த இரண்டு அறிக்கைகளிலும் ஆளுகையிலும் நிர்வாகத்திலும் அடிப்படை மாற்றம் தேவை என்று கூறப்பட்டது. அதேபோல் என்.என்.வோரா குழு அறிக்கை 1993ஆம் ஆண்டு ஒரு குறிப்பைக் கொண்டுவந்து தந்தது. அது கூறியது நம் நெஞ்சத்தைப் பிளக்கும் செய்தி.

அரசியல் எப்படி குற்றப் பின்னணி கொண்டதாக மாறி, ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துக்கு இணையாக ஒரு அரசாங்கத்தையும் பொருளாதாரத்தையும் மாபியாக்கள் நடத்தி வருகின்றனர் என்பதைப் படம் பிடித்துக்

காட்டியது. அரசியல் கட்சித் தலைவர்கள் எப்படி தாதாக்களாக செயல்படுகிறார்கள் என்பதையும் படம் பிடித்துக் காண்பித்துள்ளது.

அரசியல்வாதிகளுக்கும், கிரிமினல்களுக்கும், அரசுத்துறை அதிகாரிகளுக்கும் இருக்கும் வலுவான உறவு முறையையும் எடுத்து வைத்தது. இதை அடிப்படையாக வைத்துத்தான் மறைந்த நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணய்யர் ஒரு கருத்தை முன் வைத்தார். இந்தியாவில் அரசியல் நடக்க வேண்டுமெனில், அதற்கு குண்டர்கள் இல்லாமல் இயலாது என்றும், இதற்கு யாரும் விதி விலக்கு அல்ல என்ற கருத்தை ஒரு பொது நிகழ்வில் பதிவு செய்தார். அது மட்டுமல்ல, ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது ஒரு கருத்தைப் பதிவு செய்தார். அதாவது மத்திய அரசு அடித்தட்டு மக்களின் வளர்ச்சிக்காக ஒரு ரூபாயை டெல்லியிலிருந்து அனுப்பினால் அதில் 15 பைசா மட்டுமே ஏழைகளின் கைக்குக் கிடைக்கிறது என்று கூறினார்.

அந்தக் கருத்தை வைத்து எதிர்க் கட்சிகள் கடும் விமர்சனத்தைச் செய்தன. 85 பைசா ஊழலாகச் சென்று விட்டது என்பதுதான் எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டு. அதில் உண்மை என்ன என்பதை ஆய்வு செய்த மும்பையைச் சேர்ந்த ஆராய்ச்சி நிறுவனம் தன் ஆராய்ச்சி அறிக்கையின் மூலம் இந்த 85 பைசா ஒட்டுமொத்தமாக ஊழலாக இல்லாமல் நிர்வாகம் மற்றும் ஊழலாக இரண்டும் கலந்ததாக இருப்பதை அறிவித்தது.

இன்னும் ஒரு அடிப்படை ஆதாரம், ராஜீவ் காந்தியின் இன்னொரு முக்கியமான உரையில் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் மும்பைக் கூட்டத்தில் நிகழ்த்திய உரையில் இருக்கிறது அடுத்த ஆதாரம். அது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க ஓர் ஆய்வுரை. அது இந்தியாவில் அதுவரை நடந்த ஆட்சியின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, சுயமதிப்பீடு செய்து கட்சியை பலரது ஊழல் பிடியிலிருந்து மீட்டெடுக்க ஆற்றிய உரை.

இந்த உரையில் அவர் கோடிட்டுக் காட்டியது கடந்த கால அரசுச் செயல்பாடுகளில் ஏழை மக்கள் அடைந்த பயன்களைவிட, நம் கட்சிக்காரர்களும் அரசுத்துறை அதிகாரிகளும் அடைந்தவைகள் தான் அதிகம் என்பதைக் கோடிட்டுக் காட்டினார். அதனைத் தொடர்ந்து சமீபத்தில் வெளிவந்த நிர்வாகச் சீர்திருத்த அறிக்கைகள் இதற்குமுன் மொரார்ஜி தேசாய் தலைமையில் கொண்டு வந்த முதல் நிர்வாகச் சீர்திருத்த அறிக்கைகள் அனைத்தும் நமக்குச் சொல்லும் செய்தி நம் சுதந்திர இந்தியாவில் உருவாக்கப்பட்டு நடைமுறையில் இருக்கும் ஆளுகை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு அதன் செயல்பாடுகளால் பெருமளவு ஏழைகளைத் தொட முடியவில்லை என்பதைத்தான்.

இந்த அறிக்கைகள் அனைத்தும் ஆராய்ச்சியின் வெளிப்பாடாக வந்தவைகள். இவைகள் அத்தனையும் நமக்குத் தரும் செய்தி இன்றைய அரசாங்க அமைப்புக்கள் இன்றைய வடிவில் ஏழைகளுக்குச் செயல்படாது என்பதைத்தான். இதைத்தான் மகாத்மா காந்தியும், ஜே.சி.குமரப்பாவும் 100 ஆண்டுகளுக்கு முன் எடுத்துக் கூறினர். காந்தியும் ஜே.சி.குமரப்பாவும் அவர்களுடைய ஆழ்ந்த உள்ளுணர்வின் அடிப்படையில் மிகத் தெளிவாக இந்த மேற்கத்திய முறை பொருளாதாரம், அரசியல், அனைத்தும் சுரண்டுவோருக்கானது என்பதை பிரகடனப்படுத்தினர்.

இன்றைய சூழலில் இவற்றையும் கடந்து பல சீர்திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன. அது எதற்கானது என்று பார்த்தால், அது சந்தைக்கானதாக இருக்கிறது. மக்களுக்கானதாக இல்லை. அப்படி ஒன்று வந்தால் அது மக்களை வதைத்து சந்தையை வலுப்படுத்துவதற்காக வருகிறது. எப்படிப்பட்ட ஆளுகை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் வேண்டும் என்பதை சந்தையே தீர்மானம் செய்து, சந்தையே ஆலோசனை வழங்கி, சந்தையின் உந்துதலால் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவு சுரண்டல் செயல்பாடுகள் என்பது சட்டரீதியாக்கப்பட்டுவிட்டது.

இன்று பல ஊழல்கள் கொள்கைகள் மூலமாகவே செய்யப்பட்டுவிடுகின்றன. எப்படிப்பட்ட கல்வி வேண்டும் என்பதை இந்த முறை கார்ப்பரேட்டுக்கள் ஒவ்வொன்றும் ஒரு அறிக்கை கொடுத்து சந்தைச் செயல்பாட்டுக்கு ஆட்கள் தயாரிப்பதை கல்வி என்று ஏற்றுக்கொள்ளச் செய்துவிட்டனர். இந்த சந்தைச் செயல்பாடுகள் அரசாங்கத்தை தன்வயப்படுத்திக் கொண்டுவிட்டது.

அடுத்து சமூகத்தை நுகர்வு தீவிரவாதிகளாக மாற்றி மயக்கத்தில் வைத்துக் கொண்டுவிட்டது. அரசியலையும் அது விட்டு வைக்கவில்லை. அதன் வெளிப்பாடாக

கட்சிகளை கார்ப்பரேட் கம்பெனி மாடலில் நடக்க வழிகாட்டி, வாக்குகளையும், சந்தைப் பொருளாக மாற்றியமைத்து விட்டனர். அதன் விளைவு மக்கள் பிரச்சினைகளுக்கு போராட வேண்டிய அரசியல் கட்சிகள் மக்களை போராட வைத்துவிட்டு, மக்கள் போராட்டத்தின் பின்னணியில் அறிக்கை விட்டும் ஆர்ப்பாட்டம் நடத்தியும் தேர்தல் அரசியலுக்குமேல் முன்னேற முடியவில்லை. இந்தச் சூழலில் ஐ.நாவின் மானுட மேம்பாட்டு அறிக்கை (2020) அடுத்த அபாயச் சங்கை ஊதி இருக்கிறது.

இனிமேல் மானுடச் சமூகம் இதுவரை வாழ்ந்த வாழ்க்கைபோல் வாழ இயலாது. இயற்கையை இனிமேலும் வளர்ச்சி என்ற பெயரில் அழிக்க இயலாது. மாற்று முறை வளர்ச்சி காணுங்கள் என்று தேசங்களுக்கு அறிவுரை கூறிவிட்டது. இதைத்தான் மகாத்மா காந்தியும், ஜே.சி.குமரப்பாவும் 100 ஆண்டுகளுக்கு முன் கூறினார்கள்.

**எனவே இன்று நம் ஒட்டுமொத்த அரசியல், அரசாங்கம், ஆளுகை, நிர்வாகம் அனைத்தும் மாற்றியமைக்கப்படல் வேண்டும். அதுதான் இன்றைய தேவை. அரசியலும் சரி, அரசாங்கமும் சரி, ஆளுகையும் சரி, நிர்வாகமும் சரி, அடிப்படையில் மாற்றியமைக்கப்படல் வேண்டும். அதற்கான அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த ஒரு அறிவு ஜீவிகளின் இயக்கம் உருவாக வேண்டும்.**

---

## படித்ததில் பயனுள்ள தகவல்...( வாகனத்திற்கு காற்று அடிக்க)

நான் ஒரு பெட்ரோல் பங்கில் எனது இருசக்கர வாகனத்திற்கு நேற்று பெட்ரோல் போட்டு விட்டு டயருக்கு காற்று அடிக்க பங்கில் உள்ள காற்று அடிக்குமிடத்திற்கு சென்று வரிசையில் நின்றேன். காற்று அடித்து கொண்டுருந்த பெட்ரோல் பங்க் பணியாளர் ஒருவர் காற்றடிக்க வரும், வாடிக்கையாளர்களிடம் முகம் சுளித்தபடியே வேலை செய்து கொண்டிருந்தார். எனக்கு முன்னால் நின்ற இளைஞரிடம் வண்டியை "இப்படி நிறுத்து அப்படி நிறுத்து" என்று கூறியவர் ஒரு கட்டத்திற்கு மேல் எரிச்சலைடைந்து, ஏய்யா காத்து அடிக்கறதே ஓசி". இதுல வேற ஏன்யா இப்படி போட்டு படுத்தற" என்றார்.

இளைஞனுக்கு அடுத்து நானிருக்கிறேன் சுளீரென்றது மண்டையில் உடனே நான் "ஐயா எங்க வண்டிகளுக்கு நீங்க ஓசியில எல்லாம் காத்து அடிக்கல: ஒவ்வொரு லிட்டர் பெட்ரோலுக்கும், டிசலுக்கும், பெட்ரோலிய நிறுவனம்.., ஐம்பது பைசாவை கழிவறையை சுத்தம் செய்யவும் வருகிற வாகனத்திற்கு காற்று அடிக்கவும் தருகிறது". எங்கள் பணத்திலிருந்து. "இனி யாரிடமும் ஓசி என வார்த்தையை விடவேண்டாம் முதலில் புரிந்து கொள்ளுங்கள் இல்லாவிட்டால் உங்கள் நிறுவன மேலாளரிடம் கேட்டுத்தெரிந்து தெளிந்து, வரும் வாகன ஓட்டிகளிடம் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள்". என்று, விவரம் கூறியது மட்டுமின்றி பங்க் மேலாளரை அழைத்து புகார் கூறிவிடுவேன் எனவும் கூறினேன்.

நண்பர்களே நாம் நம் வாகனத்திற்கு வாங்கும் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு ஒவ்வொரு லிட்டருக்கும் ₹ *2.50* ரூபாய் கமிஷனாகவும் மேலும் *ஐம்பது பைசா கழிவறையை பராமரிக்கவும் காற்று அடித்துக்கொள்ளவும்* பங்க் நடத்தும் ஏஜென்ஸிக்கு பெட்ரோலிய நிறுவனம் தருகிறது. இந்த வசதியை வாடிக்கையாளருக்கு செய்து தர மறுக்கு பங்க் மீது ஒருவாடிக்கையாளர் மெயில் மூலம் புகார் தரும்பட்சத்தில் அந்த பங்க் தற்காலிகமாக பெட்ரோலிய பொருட்கள் சப்ளை செய்வதை எண்ணெய் நிறுவனம் நிறுத்திவிடும்.! பிறகு உங்கள் சமாதான பதில் மெயிலுக்கு, பிறகே பங்க் விற்பனையை தொடங்கும், ஆகவே நண்பர்களே கார் பயணமோ இருசக்கர வாகன பயணமோ ஒரு வாடிக்கையாளருக்கு கழிவரையை மற்றும் காற்று அடிக்கவும் மறுக்கும் பங்க் மீது அங்கே பெயர் பலகையில் குறிப்பிட்டுருக்கும் மெயில் ஐடிக்கு புகாரளியுங்கள் ....
உடனடி நடவடிக்கை எடுப்பார்கள்.

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .
**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

## மணப்புரம் ஃபைனான்ஸ் சிஇஓ-வின் ரூ.143 கோடி சொத்து முடக்கம்

ஜெ.சரவணன்( Vikatan)

**மக்கள் பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டு; மணப்புரம் ஃபைனான்ஸ் சிஇஓ-வின் ரூ.143 கோடி சொத்து முடக்கம்.**

சோதனை நடவடிக்கையின்போது பணமோசடி தொடர்பான ஆவணங்களும், 60 அசையா சொத்துகளின் சொத்து ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன. இந்த ஆவணங்கள் மணப்புரம் ஃபைனான்ஸ் மீதான குற்றச்சாட்டுகளை உறுதி செய்வதாக உள்ளன என்று அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் ஒன்றான மணப்புரம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் சி.இ.ஓ வி.பி.நந்தகுமாரின் ரூ.143 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கி உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தங்க நகை அடமானக் கடன் உள்ளிட்ட பல்வேறு நிதி சேவைகளை வழங்கிவரும் முன்னணி NBFC நிறுவனமான மணப்புரம் ஃபைனான்ஸ், கேராளவைத் தலையிடமாகக் கொண்டு இயங்குகிறது. சமீபத்தில் இந்நிறுவனத்துக்குச் சொந்தமான இடங்களில் திடீரென்று அமலாக்கத்துறை சோதனையில் ஈடுபட்டது. சோதனையில் கைப்பற்றிய ஆவணங்களின் அடிப்படையில் சுமார் ரூ.143 கோடி மதிப்பிலான சொத்துகளை முடக்கி உள்ளதாகக் கூறியுள்ளது.

'கிரிப்டோ முதலீடு... 100 சதவிகித லாபம்' - பல கோடி ரூபாய் மோசடி செய்த நிதி நிறுவன உரிமையாளர் கைது! இந்தத் திடீர் அதிரடி நடவடிக்கைக்குக் காரணம், மணப்புரம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் மீது எழுந்துள்ள சட்டவிரோத பணமோசடி குற்றச்சாட்டுதான். மணப்புரம் ஃபைனான்ஸ் மக்களின் டெபாசிட் பணத்தை சட்டவிரோதமாகப் பண மோசடி செய்து, அதன் சி.இ.ஓ நந்தகுமார் தன் பெயரிலும் தன்னுடைய குடும்பத்தினர் பெயரிலும் சொத்துகளை வாங்கியிருப்பதாகவும், மேலும், பங்குச் சந்தையிலும் முதலீடு செய்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இது குறித்து அமலாக்கத் துறை தரப்பில் கூறியதாவது: `மணப்புரம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனம் மக்களிடமிருந்து டெபாசிட் தொகையாகத் திரட்டிய பணத்தை, சட்டவிரோதமாகக் கையாண்டு பல்வேறு அசையாத சொத்துகளில் முதலீடு செய்ததாகக் கூறப்படுகிறது.

சி.இ.ஓ நந்தகுமார், அவருடைய மனைவி மற்றும் அவருடைய பிள்ளைகளின் பெயர்களில் இந்தச் சொத்துகள் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. இது மட்டுமல்லாமல் மக்களின் டெபாசிட் தொகையில் குறிப்பிட்ட பகுதி பணத்தை, பங்குகளிலும் முதலீடு செய்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சோதனை நடவடிக்கையின்போது பணமோசடி தொடர்பான ஆவணங்களும், 60 அசையா சொத்துகளின் சொத்து ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன. இந்த ஆவணங்கள் மணப்புரம் ஃபைனான்ஸ் மீதான குற்றச்சாட்டுகளை உறுதி செய்வதாக உள்ளன" என்று கூறியுள்ளது.

இதையடுத்து பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் மணப்புரம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் சி.இ.ஓ வி.பி.நந்தகுமாரின் சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது. அமலாக்கத் துறை முடக்கிய மொத்த சொத்துகளின் மதிப்பு சுமார் ரூ.143 கோடி இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இதில் அசையா சொத்துகள் போக எட்டு வங்கிக் கணக்குகளில் உள்ள வைப்புத்தொகை, பட்டியலிடப்பட்ட நிறுவன பங்குகள், இதர முதலீடுகள் ஆகியவையும் அடங்கும். இந்த பணமோசடி நடவடிக்கைகளை, ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் எதுவும் பெறாமல் மணப்புரம் அக்ரோ ஃபார்ம்ஸ் என்ற நிறுவனத்தின் மூலமாக வி.பி.நந்தகுமார் மேற்கொண்டிருப்ப தாகக் கூறப்படுகிறது.

இந்த நிறுவனத்துக்கும், மணப்புரம் ஃபைனான்ஸ் நிறுவனத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், மேலும் அமலாக்கத்துறையின் இந்த நடவடிக்கை அனைத்தும் நிர்வாக இயக்குநர் வி.பி.நந்தகுமார் மீது எடுக்கப்பட்டவைதானே தவிர, நிறுவனத்தின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் மணப்புரம் ஃபைனான்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஏற்கெனவே ரிசர்வ் வங்கி மோசடி நடந்திருப்பதை அறிந்து டெபாசிட்தாரர்களுக்கு பணத்தை திரும்பத் தர வேண்டுமென உத்தரவிட்டது. டெபாசிட்தாரர் களுக்குப் பணத்தைத் திரும்ப தந்துவிட்டதாகக் கூறியது மணப்புரம் ஃபைனான்ஸ் கூறியிருந்தது. ஆனால், விசாரணையில் மக்களின் டெபாசிட் பணத்தை திரும்ப வழங்கியதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

**நகைகளைத் திருப்பச் சென்றவர்களுக்குக் கிடைத்த அதிர்ச்சி - மணப்புரம் கோல்டு நிறுவன மேலாளரின் கைவரிசை**

அதேசமயம் அமலாக்கத்துறை சொத்துகளை முடக்கியது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ளார் மணப்புரம் ஃபைனான்ஸ் சி.இ.ஓ வி.பி.நந்தகுமார். அவர், `அமலாக்கத்துறை கைப்பற்றியிருக்கும் சொத்துகள், பங்குகளின் மதிப்பு ரூ.2,000 கோடி ஆகும். ஆனால், ரூ.143 கோடி மதிப்புள்ள சொத்துகள் எனக் கூறப்படுகிறது. இந்த விவகாரத்தில் சட்டப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளேன்" எனக் கூறியிருக்கிறார்.

---

## <u>இவர் தான் உண்மையான டி.ஆர்.ஓ….</u>

கரூர் மாவட்ட வருவாய் அலுவலராக சூர்யபிரகாஷ் பணியாற்றி வருகிறார். இவர் அலுவல் வேலையாக அரவக்குறிச்சி சாலையில் பயணித்திருக்கிறார். அப்போது, டூவீலரில் சென்ற ஒரு இளைஞரை அடையாளம் தெரியாத வாகனம் மோதிவிட்டு சென்றிருக்கிறது. அதைபார்த்ததும் பதறிப்போன டி.ஆர்.ஓ. சூர்யபிரகாஷ், உடலில் பலத்த காயம்பட்ட நிலையில் கிடந்த அந்த இளைஞரை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க, அங்கிருந்து 108 ஆம்புலன்ஸூக்கும், கரூர் அரசு மருத்துவமனைக்கும் போன் செய்து தகவல் சொல்லி இருக்கிறார். உடனே,கரூரில் இருந்து 108 ஆம்புலன்ஸூம் வந்திருக்கிறது.

சம்பவ இடத்தில் ஆபத்தான நிலையில் இருந்த அந்த இளைஞரை ஆம்புலன்ஸில் ஏற்றுவதுவரை பார்த்துவிட்டு, ஆம்புலன்ஸ் டிரைவரிடம், 'கரூர் அரசு மருத்துவமனைக்கு தகவல் சொல்லிட்டேன். டாக்டர்கள் தயாராக இருக்காங்க. சீக்கிரம் அங்க இவரை கொண்டு போயிருங்க' என்று சூர்யபிரகாஷ் சொல்லி இருக்கிறார். அதற்கு சரியென தலையாட்டிய அந்த ஆம்புலன்ஸ் டிரைவர், விபத்தில் காயமடைந்த இளைஞரைக் கொண்டு போனது கரூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு. அங்கு அந்த இளைஞருக்குச் சிகிச்சை அளித்த பின்,அவரது உறவினர்களிடம் பில் தொகையைக் கூற, அவர்கள் கலங்கி போயிருக்கிறார்கள்.

இந்தத் தகவல் டி.ஆர்.ஓ. சூர்யபிரகாஸூக்கு போக, அந்த தனியார் மருத்துவமனைக்கு போன் போட்டு,"அந்த இளைஞரிடம் ஒருரூபா வாங்கக் கூடாது. இனிமேல் இதுபோல் 108 ஆம்புலன்ஸ் டிரைவர்களை வைத்து, உங்களுக்கு ஆள் பிடிக்க கூடாது. மீறி செய்தால், மருத்துவமனை அங்கீகாரம் ரத்து செய்யப்படும்' என்று அழுத்தி சொல்லி இருக்கிறார். இன்னொரு பக்கம்,அந்த ஆம்புலன்ஸை காவல்துறையை விட்டு, மடக்க சொன்னவர், அந்த டிரைவரை சஸ்பெண்ட் செய்ய வைத்திருக்கிறார். "இனி இந்த மாவட்டத்தில் இப்படி ஒரு பித்தலாட்டம் நடக்காது. நடக்க விடமாட்டேன்" என்றார் நம்மிடம் டி.ஆர்.ஓ சூர்யபிரகாஷ்.

**எளியவர்களுடன் ஒரு நாள் (மரக்கன்றுகள்)**

**'வி**வசாயத்தையும், விவசாயிகளையும் அதிகார மட்டத்தின் கடைக்கோடி ஊழியர் கூட மதிப்பதில்லை என்பதுதான் சமூகத்தின் ஒட்டுமொத்தக் குற்றச்சாட்டு. ஆனால், சாதாரண ஓர் ஏழை விவசாயியின் அழைப்புக்கு மதிப்பு கொடுத்து, விழா ஒன்றில் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார் கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் (டி.ஆர்.ஓ) சூர்யபிரகாஷ்!

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி ஒன்றியத்தில் உள்ள குள்ளமாப்பட்டியைச் சேர்ந்த ரவி, தன் தோட்டத்தில் பத்தாயிரம் மரக்கன்றுகளை வளர்த்தெடுத்து அதனை மக்களுக்கு இலவசமாக வழங்கவும் விழா ஒன்றை ஏற்பாடு செய்தார். இந்த விழாவுக்குத் தலைமை தாங்க டி.ஆர்.ஓ சூர்யபிரகாஷைத் தயக்கத்தோடு அழைத்தார் ரவி. ஆனால், டி.ஆர்.ஓ சூர்யபிரகாஷோ தான் மட்டுமல்லாது கோட்டாட்சியர், அந்தப் பகுதி தாசில்தார் ஆகியோருடன் விழாவுக்குச் சென்று விவசாயி ரவியை நெகிழச் செய்துவிட்டார்.

எந்தவிதப் பந்தாவும் இல்லாமல் மரக்கன்றுகளை வழங்கிமுடித்த டி.ஆர்.ஓ, ரவி குடும்பத்தினர் கொடுத்த கூழை தரையில் அமர்ந்துகொண்டு குடித்தார். பின்னர் அந்த ஊர் மக்களை நோக்கி, உங்கள் ஊருக்கு என்ன வேண்டும்? எனக் கேட்டு குறித்துக்கொண்டார். ஆச்சர்யத்தில் விழி விரிய நின்று வேடிக்கைப் பார்த்த கிராம மக்களிடம், "நாங்க உங்க சர்வன்ட். நீங்க எங்களைப் பார்த்து அச்சப்படத் தேவையில்லை" என்று சொல்லி, குழுமி இருந்த மக்களை மூக்கின் மேல் விரல் வைக்கச் செய்தார்.

டி.ஆர்.ஓ சூர்யபிரகாஷ், மற்ற அதிகாரிகளிலிருந்து சற்று வித்தியாசமானவர். இலவசமாக மரக்கன்று வழங்கும் விழாவை யார் நடத்தினாலும் அந்த விழாவில், இவராகப் போய் கலந்துகொண்டு சிறப்பிப்பார். அதோடு, தன் பங்குக்கு பத்து மரக்கன்றுகளையும் வாங்கிக்கொண்டு மக்களுக்கு வழங்குவதும் இவரது வழக்கம். குறிப்பாக கரூர் மாவட்டத்தில்

உள்ள 50-க்கும் மேற்பட்ட தனியார், அரசு பள்ளி - கல்லூரிகளில் நடைபெற்ற மரக்கன்று நடும் விழாக்களில் கலந்துகொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டிருக்கிறார். அதோடு, கரூர் மாவட்டம் முழுக்க வருவாய் துறை அதிகாரிகள் மூலம் இதுவரை ஆயிரக்கணக்கான மரங்களை நட வைத்திருக்கிறார். மாவட்டம் முழுக்க ஒரு லட்சம் மரங்கள் வளர்ப்பதை லட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்.

**இயற்கை விவசாயம்**

இப்போது விவசாயி ரவி விஷயத்துக்கு வருவோம். தஞ்சாவூர் மாவட்டத்தில், பிஸினஸ் செய்து வந்த ரவி, அந்தப் பணத்தைக் கொண்டு கரூர் மாவட்டத்திலுள்ள தனது ஊரில், 20 ஏக்கர் மானாவாரி நிலத்தை வாங்கியிருக்கிறார். அதில், இயற்கை விவசாயம் பார்க்கக் கிளம்பிய ரவியைப் பார்த்து மொத்தக் கிராமமும், கோமாளிப் பய... பொட்டல் காட்டை இவ்வளவு காசு கொடுத்து யாராச்சும் வாங்குவானா? அதுல இயற்கை விவசாயம் வேற. உருப்பட்ட மாதிரிதான் என்று ஏளனம் செய்துள்ளனர்.

ரவியோ, "நான் ஜெயித்துக் காண்பிக்கிற வரையில் கோமாளியாகவே இருந்துட்டுப் போறேன்" என்று பதில் அளித்ததோடு, தனது வயலுக்கு முன்பு கோமாளிப் பண்ணை என்று போர்டும் எழுதிவைத்துவிட்டு தன் விவசாய வேலைகளில் கவனமாகிவிட்டார். கூடவே, இயற்கை விவசாயத்தின் மீது மக்களுக்கு விழிப்பு உணர்வு ஏற்பட வைக்க, பத்தாயிரம் மரக்கன்றுகளை வழங்கும் விழாவுக்கும் ஏற்பாடு செய்தார். தனது முகநூல் பக்கத்தில் அதற்கான அழைப்பும் விடுத்தார். கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் சூர்யபிரகாஷ் மரம் வளர்ப்பதில் ஆர்வமானவர் என்பதைத் தெரிந்துகொண்டு, அவரது போன் நம்பரை வாங்கி, எனது விழாவுக்கு வர முடியுமா? என்று வாட்ஸப் மூலம் தயங்கித் தயங்கி அழைப்பு விடுத்திருக்கிறார்.

அன்னைக்கு கொஞ்சம் வேலைப்பளு அதிகம். இருந்தாலும் வரப் பார்க்கிறேன் என்று டி.ஆர்.ஓ பதில் அனுப்பியிருக்கிறார். அவர் எங்கே நாம் நடத்தும் நிகழ்ச்சிக்கு வரப்போகிறார்? என்று நினைத்த ரவி, பெரிதாக எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை. வழங்குவதற்கு பத்தாயிரம் மரக்கன்றுகள், வந்தவர்கள் குடிக்க கம்மங்கூழ், மதியம் சைவச் சாப்பாடு என்று சிம்பிளாக விழா ஏற்பாடுகளை செய்திருந்தார் ரவி. ஆனால், 11 மணிக்கு அவரது வயலில் மூன்று அரசாங்கக் கார்கள் பரபரப்பாக வந்து நின்றன. அவற்றிலிருந்து மாவட்ட வருவாய் அலுவலர் சூர்யபிரகாஷ், கோட்டாட்சியர் சரவணமூர்த்தி, அரவக்குறிச்சி வட்டாட்சியர் சந்திரசேகர் ஆகியோர் வரிசையாக இறங்க, ரவி ஆச்சர்யத்தில் வாயடைத்துப் போனார். கூடவே, மாவட்ட வருவாய் அலுவலர் வருகிறாராமே! என்ற பதற்றத்தில், அந்தப் பகுதி வருவாய் ஆய்வாளர் ரவிவர்மன், கிராம நிர்வாக அலுவலர் முருகவேல் ஆகியோர் பதறியடித்துக்கொண்டு வந்தனர். சார் நீங்க வர்றது தெரியாததால, எந்த ஏற்பாடுகளையும் செய்யலை. சேர்கள் கூட ரெடி பண்ணலை என்று ரவி பதற, அவரை ஆசுவாசப்படுத்திய டி.ஆர்.ஓ, ஒண்ணும் பதற வேண்டாம். நாங்களும் நீங்கள் கொடுக்கும் மரக்கன்றுகளை வாங்கத்தான் வந்திருக்கிறோம். உங்களுக்கு சேவை செய்யும் சாதாரண சர்வன்ட்கள்தான் நாங்க. எங்களைப் பார்த்து அச்சப்படத் தேவையில்லை என்றதோடு இரும்பு சீட்களால் வேயப்பட்ட கொட்டகையின் கீழ் போடப்பட்டிருந்த பாயில் மக்களோடு மக்களாகத் அமர்ந்துகொண்டார். வெயில் நேரம்... இரும்பு சீட் என்பதால், எல்லோருக்கும் வியர்த்து ஒழுகியது. வழியும் வியர்வையை கைக்குட்டையால் துடைத்துக்கொண்ட டி.ஆர்.ஓ., ரவி ஏற்பாடு செய்திருந்த கம்மங்கூழை வாங்கி சுவைத்துக் குடித்தார்.

தொடர்ந்து ரவியைப் பற்றிக் கேட்டறிந்த டி.ஆர்.ஓ சூர்யபிரகாஷ், சபாஷ். பார்க்கும் தொழிலை விட்டுட்டு, விவசாயம் பார்க்க வந்ததே பெரிய விசயம். அதைவிட, ஊர்க்காரங்க அவச்சொல்லையும் மீறி பொட்டல் காட்டை வாங்கி இயற்கை விவசாயம் பார்க்கக் கிளம்பியிருப்பது பாராட்டத்தக்க செயல். நாம நாமளா வாழணும். தப்பு செய்யத்தான் அடுத்தவங்களுக்கு அஞ்சணும். இதுபோல, நல்லது செய்ய யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. அவங்களால குறை சொல்லத்தான் முடியும். ஆனால், நீங்க செயல்வீரர். தொடர்ந்து எந்த விமர்சனத்துக்கும் அஞ்சாமல், இதே வழியில் செயல்படுங்கள் என்று ரவியை வாழ்த்தினார். தொடர்ந்து அங்கே மரக்கன்றுகள் வாங்க வந்திருந்த இயற்கை ஆர்வலர்களிடம், நான் பேச வேண்டியதில்லை. நீங்கள்தான் பேச வேண்டும் என்றவர் ஒவ்வொரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பேசச் சொன்னார். எல்லோரும் உயரதிகாரி முன்பு திடீர்னு எப்படி பேசுறது? என்று தயங்க, அவர்களின் தயக்கம் தீர்த்துப் பேசவைத்தார். சரோஜா என்பவர், தான் இயற்கை விவசாயம் செய்வதை சாதாரணமாகச் சொல்ல, புரட்சி, மாற்றம் என்கிற வார்த்தைகளுக்கு உண்மையில் இவங்க பண்ற காரியம்தான் அர்த்தம் என்று சிலாகித்தார் டி.ஆர்.ஓ.

அதோடு, ரவி உள்ளிட்ட ஊர் விவசாயிகளிடம், இந்தப் பகுதிக்கு நாங்க ஏதாவது செய்ய நினைக்குறோம். அதனால்தான், எல்லா அதிகாரிகளையும் அழைத்து வந்திருக்கிறேன். என்ன வேண்டும்? என்று கேட்டார். இந்தப் பகுதியில் உள்ள ஈசநத்தத்தில், பெரிய ஏரி இருக்கு. அதிலிருந்து எங்கள் கிராமம் உள்ளிட்ட சில கிராமங்களுக்கு தண்ணீர் போக வேண்டிய வாய்க்கால்கள் தூர்ந்து கிடக்கு. அவற்றை தூர் வாரணும் என்று சில கோரிக்கைகளை வைத்தனர் உள்ளூர் மக்கள். அதைக் கவனமாகக் குறித்துக் கொண்ட டி.ஆர்.ஓ, அந்தப் பகுதி வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலரிடம் அதுபற்றி கூடுதல் விபரம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

விரைவில் நீங்கள் சொல்லும் குறைகள் தீர்க்கப்படும் என்றவர், தொடர்ந்து ரவி தோட்டத்தில், தனது கையால் மரக்கன்றுகளை நட்டார். கூடவே, கோட்டாட்சியர், தாசில்தாரையும் மரக்கன்றுகள் நட வைத்தார். ரவியின் உறவுச் சிறுமி ஒருவர் துடிப்பாக இருக்க, அந்தச் சிறுமியையும் ஒரு மரக்கன்று நட வைத்தார். அதன்பிறகு, வந்திருந்தவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார். திடீரென ரவியிடம், மறுபடியும் இப்படி மரக்கன்றுகளைக் கொடுக்க வைத்து என்னைக் கெஸ்ட்டாக மாற்றுகிறீர்கள். நானும் இங்கே நீங்கள் வழங்கும் மரக்கன்றுகளை வாங்கத்தான் வந்தேன் என்று சொல்லி, ரவி வழங்கிய இரண்டு மரக்கன்றுகளைப் பெற்றுக் கொண்டார்.

எப்போது வேண்டுமானாலும் எந்த உதவி வேண்டுமானாலும் என்னை அழையுங்கள்" என்று ரவியிடம் கூறிய டி.ஆர்.ஓ, கிளம்பத் தயாரானார். அப்போது மதிய சாப்பாடு தயார் செய்து கொண்டிருந்த மூதாட்டி ஒருவர், மதியம் இருந்து சாப்பிட்டுப் போறது? என்று கேட்க, எனக்கு நீங்க சமைக்கிறது பத்தாது. அப்படி சாப்பிடுவேன். பரவாயில்லையா? என்று கிண்டலடித்துவிட்டு, வாகனம் நோக்கி நகர்ந்தார். அப்போது, ஓரமாக நின்ற தனது தந்தையை டி.ஆர்.ஓ-வுக்கு அறிமுகப்படுத்தினார் ரவி. அவரைக் கையெடுத்துக் கும்பிட்ட டி.ஆர்.ஓ, "நல்ல மகனை பெற்றிருக்கிறீர்கள். கஷ்டகாலத்திலும் ஒரு லட்சம் செலவு பண்ணி பத்தாயிரம் மரக்கன்றுகள் வழங்கியிருக்கிறார். நீங்கள் மகனை நினைத்து பெருமைப்படுங்கள் என்று சொல்ல, ரவியும், அவரது தந்தையும் கண்கலங்கினர்.

மாவட்ட வருவாய் அலுவலர் சூர்யபிரகாஷிடம் பேசினோம்....

"நான் வழக்கமான அதிகாரியாக இருக்க விரும்பலை. உண்மையில் ஏழ்மை நிலைமையிலும் இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்த ரவி ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கி இப்படி மரக்கன்றுகளை வழங்கியிருக்கிறார். எனக்கும் இயல்பாகவே மரம் வளர்ப்பதில் அதிக ஈடுபாடு உள்ளது. கரூர் மாவட்டத்தில் யார் மரக்கன்றுகள் வழங்கினாலும், முதல் ஆளாகப் போய் நானும் அந்த நிகழ்ச்சியில் கலந்துக்கிறேன். அப்படித்தான் எனது வாட்ஸப்பில் தகவல் அனுப்பிய ரவியின் இந்த விழாவிலும் கலந்துகொண்டு நானும் இரண்டு மரக்கன்றுகள் பெற்றிருக்கிறேன். டி.ஆர்.ஓ-வாக பணிபுரிய எனக்கு அரசு சம்பளம் தருகிறது. ஆனால், எந்த லாபமும் இல்லாத விஷயத்தில் ரவி இப்படி செயல்படுவதுதான் பெரிது. அவரின் இந்தச் செயலை ஊக்கப்படுத்தத்தான் நான் சர்ப்ரைஸா விழாவில் கலந்துக்கிட்டேன். இந்தப் பகுதி விவசாயிகள் வைத்த கோரிக்கைகளும் விரைவில் நிறைவேற்றப்படும். இப்போது உள்ள பத்து வயசு பையனும் மரக்கன்றுகள் வளர்க்கணும். இயற்கையைக் காக்கணும்னு களத்தில் இறங்குறான். நான் இன்னமும் அதிகாரி தோரணையில் ரூமுக்குள் உட்கார்ந்திருந்தா நல்லாவா இருக்கும்? அதான், களத்துக்கு வருகிறேன். அதோடு, உழவையும், உழவனையும் மதிக்கத் தெரியாத யாரும் நல்லா வாழ முடியாது என்பதை நம்புகிறவன் நான்" என்றார்.

**இவர்களைப் போன்ற நல்ல அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள், பாராட்டுக்கள்..**
**மற்ற கேடு கெட்ட அதிகாரிகளும் இருக்கிறார்கள்...**

**(நன்றி) அரசியல் டைம்ஸ்.காம்**

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு வெ அய்யப்பன், தலைவர் **: 75501 82438**
திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் **: 87783 12823**
திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் **: 90031 25142**
**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

## செயற்குழுக் கூட்டம் (17-06-2023)

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், பொதுச் செயலாளர் மற்றும் ஐந்து செயற்குழு உறுப்பினர்களும், மூன்று உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு மே மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற ஆண்டு (2022-23) தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த செயற்குழுக் கூட்டத்தில் இந்த வரவு செலவு கணக்கு ஆண்டறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையை இவ்வாண்டு நடக்க இருக்கும் பொதுக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானம் நிறைவேறியது.

3. நமது இயக்க உறுப்பினர் திரு மனுராஜ் மீது சென்ற ஆண்டு நிகழ்வில் நடந்த ஒரு புகாரின் பெயரில் தன்னிலை விளக்கம் கேட்கப்பட்டது. திருமனுராஜ் அவர்கள் பதில் ஏதும் கொடுக்காவிட்டாலும், திருச்சி மாவட்டத் தலைவர், அவர் மாவட்ட உறுப்பினர்களுடன் சேர்ந்து முடிவெடுத்து பதில் அளித்திருக்கிறார். திரு மனுராஜ் அவர்களின் நீண்ட கால உறுப்பினர் சேவையையும், பொதுக்குழுவில், அவர் நடக்கக் காரணமாக, அன்று ஏற்பட்ட விரும்பத்தகாத சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு, எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்று பரிந்துரை செய்துள்ளார். எனவே இந்த விஷயத்தில் திரு மனுராஜ் மீது எந்த நடவடிக்கையும் வேண்டாமெனத் தீர்மானம் நிறைவேறியது.

4. நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவு மனுவைத் தயாரிக்க நமது செயலாளர் (சட்டம்) திரு நஃபீஸ் அஹமத் முன்னாளில் விருப்பம் தெரிவித்திருந்தார். அதைக் கூடிய விரைவில் தயாரிக்குமாறு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

5. இவ்வருடம் நமது இயக்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் திருச்சியில் நடைபெற வேண்டுமென திருச்சி மாவட்டத் தலைவர் விருப்பம் தெரிவித்துள்ளார். இது குறித்து செயற்குழு விவாதித்து, முடிவில் திருச்சியில் நடத்தத் தீர்மானம் நிறைவேறியது. இப்பொதுக்குழு நடத்த திருச்சி மாவட்டத் தலைவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்வார்

6. நமது வலைத்தளத்தில் நமது இயக்க செய்திகளை திரு புகழேந்தி என்பவர் தான் பிரசுரிக்கிறார். அவர் தற்போது ரூபாய் 5000/- கேட்டு வின்னப்பித்துள்ளார். இதைப்பற்றி அடுத்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்

7. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம் ஒப்பம்

**வெ ஐயப்பன்**
**உப தலைவர்**

**வே கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

**Shun Corruption!** **Feel Proud!!**

# ANTI CORRUPTION MOVEMENT CHENNAI

## REGD.NO.349/2001

**E Mail: acmchennai2001@yahoo.co.in**
**Website: anticorruption movementchennai.com**

**President**
**Thiru.V.Ayyappan**
**Ph: 75501 82438**

**General Secretary**
**Thiru.V.Karthikai Rajan B.E. (Hons) M.Tech, M.B.A, PGDHR**
**Ph: 8778312823**

…………………………………………………………………………………………………………………………………………………….

**நமது அன்பான உறுபினர்களே !**

நமது இயக்கத்தின் இவ்வாண்டு பொதுக்குழுக்கூட்டம் இம்மாதம் 30ம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் நடைபெற உள்ளது. பொதுக்குழு நடைபெறும் இடமும் நிகழ்ச்சிகளும் கீழே கொடுக்கப்படுள்ளன. நமது உறுப்பினர்கள் அனைவரும் கண்டிப்பாக நேரில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

**நாள் : 30.07.2023 ஞாயிற்று கிழமை**

**இடம் : கூட்டஅரங்கம், திருச்சிராப்பள்ளி பல் நோக்கு சமூக பணிமையம் (TMSSS) 49K பாரதியார் சாலை, ஜென்னி ப்ளாசா எதிரில், கன்டோன்மென்ட், திருச்சி-620001.**

**நிகழ்ச்சி நிரல்**

- **மாலை 4.00.மணி முதல் 5.00 மணி வரை தேநீர் மற்றும் பதிவு செய்தல்**
- **5.00 தமிழ்த்தாய் வாழ்த்து**
- **5.02 வரவேற்புரை**
- **5.05 மாநில தலைவர் உரை**
- **5.30 2022-23 இயக்க ஆண்டு அறிக்கை - பொது செயலர்**
- **5.40 இயக்க ஆண்டு வரவு செலவு அறிக்கை - நிதிச்செயலர்**
- **5.50 மாவட்ட்த் தலைவர்கள்/உறுப்பினர்கள் உரை**
- **6.30 கலந்தாய்வு மற்றும் இயக்க வளர்ச்சிக் கருத்துகள்**
- **7.15 கூட்டத் தீர்மானங்கள்**
- **7.30 ஊழல் ஒழிப்பு உறுதி மொழி**
- **7.35 நன்றி உரை**
- **7.40 நாட்டுப் பண்**
- **7.45 இரவு உணவு**

**ஒப்பம்**

**தேதி : 06 ஜூலை 2023** **பொதுச்செயலாளர்**

**(குறிப்பு : அனைத்து உறுப்பினர்களும் தங்கள் வருகையை தொலைபேசி மூலம் உறுதிசெய்ய கேட்டு கொள்கிறோம்.**
**தொடர்பு எண் : 044-26741007 ,9486346442, 9443179625**

**C.N.JAYACHANDRAN & CO,**
**CHARTERED ACCOUNTANTS**

**PARTNERS : C.N.Jayachandran B.Com., F.C.A.,**
**R.Maheshwari B.Com., F.C.A.,**

**Room No.2, Third Floor,**
**Catholic Centre,**
**64/108, Armenian Street**
**Chennai - 600 001**
**Phone : 044-25387204**

14.06.2023

AUDITOR'S REPORT TO THE MEMBERS OF THE ASSOCIATION ANTI CORRUPTION MOVEMENT – (REDG. UNDER THE SOCIETIES ACT) REG NO: 349/2001, NO.7, KAVERI STREET, GANDHI NAGAR, SALIGRAMAM,CHENNAI–600093,ADMN.OFF.NO.155,KONNUHIGHROAD,AYANAVARAM, CHENNAI- 600 023 FOR THE YEAR ENDED 31ST MARCH 2023.

We have audited the Balance Sheet of the Association ANTI CORRUPTION MOVEMENT as on 31st March 2023 and the Income and Expenditure Account for the year ended on that date and report that:

We have obtained all the information and explanations which to the best of our knowledge and belief were necessary for the purpose of our audit.

In our opinion proper books of accounts as necessary have been kept by the ANTI CORRUPTION MOVEMENT so far as appears from our examination of the books.

The Balance Sheet and Income and Expenditure Account are in agreement with the Books of accounts and,

In our opinion and to the best of our information and according to the explanations given to us, the said accounts give a true and fair view:

(a) In the case of Balance Sheet of the state of affairs of the ANTI CORRUPTION MOVEMENT as on 31.03.2023.

(b) In the case of Income and Expenditure Account of the Excess of Income over Expenditure for the year ended on that date.

C.N. JAYACHANDRAN & CO. FRN: 001286S CATHOLIC CENTRE 64, ARMENIAN ST., CHENNAI-600 001. CHARTERED ACCOUNTANTS

R. Mahe

(R MAHESWARI)
PARTNER
UDIN: 23210225BGUQCA9719

ANTI CORRUPTION MOVEMENT
REG.NO.349/2001
NO.7, KAVERI STREET, GANDHI NAGAR,SALIGRAMAM,CHENNAI-600 093.
ADMN.OFF:NO.155,KONNU HIGH ROAD,AYANAVARAM,CHENNAI- 600 023.

RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR 01.04.2021 TO 31.03.2023

| RECEIPTS | AMOUNT | PAYMENTS | AMOUNT |
|---|---|---|---|
| To Opening Balance: | | By Priniting & Stationery | 6,504 |
| Cash on Hand | 497 | | |
| Cash at Bank: | | " Postage/Xerox & Courier | 8,940 |
| SBI,A/c.No.10081976798 | 32,493 | | |
| IOB,A/c.No.41657 | 2,17,984 | " Salary to Office in Charge | 60,000 |
| " Subscription | 41,700 | " Travelling Expenses | 1,470 |
| " Life Membership | 17,200 | " EC Expenses | 500 |
| " Donations- others | 31,758 | " Office Maintanance | 22,330 |
| " Donations - Legal Fund | 1,29,050 | " General Body Expenses | 24,210 |
| " Bank Interest: | | " Payment to District Fund | 12,600 |
| S.B A/c.-SBI | 887 | | |
| | | " Rent paid | 84,000 |
| S.B.A/c. - IOB | 5,875 | | |
| | | " Closing Balance: | |
| " FD Interest | 1,44,501 | Cash on Hand | 2,177 |
| | | Cash at Bank: | |
| | | SBI,A/c.No.10081976798 | 33,379 |
| | | IOB,A/c.No.41657 | 3,65,835 |
| TOTAL RS. | 6,21,945 | TOTAL RS. | 6,21,945 |

We declare that the particulars furnished above are true and correct to the best of our knowledge and belief

V. Ayyappan

Place: Chennai
Date :14.06.2023

(V.KARTHIKAIRAJAN)
General Secretary

~~(N.SUBRAMANIAN)~~
President

TO BE READ WITH MY REPORT

For C N JAYACHANDRAN & CO

C.N. JAYACHANDRAN & CO. CHARTERED ACCOUNTANTS
FRN: 001286S
CATHOLIC CENTRE
64, ARMENIAN ST.,
CHENNAI-600 001

(R MAHESWARI)
PARTNER
UDIN: 23210225BGUQCA9719

ANTI CORRUPTION MOVEMENT
REG.NO.349/2001
NO.7, KAVERI STREET, GANDHI NAGAR,SALIGRAMAM,CHENNAI-600 093.
ADMN.OFF:NO.155,KONNUR HIGH ROAD,AYANAVARAM,CHENNAI- 600 023.

INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR 01.04.2021 TO 31.03.2023

| EXPENDITURE | AMOUNT | INCOME | AMOUNT |
|---|---|---|---|
| To Prinintg & Stationery | 6,504 | By Subscription | 41,700 |
| " Postage/Xerox & Courier | 8,940 | " Donations | 31,758 |
| " Salary to Office in Charge | 60,000 | " Nermai Neri - Donation | - |
| " Travelling Expenses | 1,470 | " Interest on FD | 1,44,501 |
| " Rent paid | 84,000 | " Bank Interest: | |
| | | S.B A/c.-SBI | 887 |
| " EC Expenses | 500 | S.B.A/c. - IOB | 5,875 |
| " Office Maintanance | 22,330 | | |
| " Payment to District Fund | 12,600 | | |
| " General Body Expenses | 24,210 | | |
| " Excess of Income over Expenditure | 4,167 | | |
| TOTAL RS. | 2,24,721 | TOTAL RS. | 2,24,721 |

We declare that the particulars furnished above are true and correct to the best of our knowledge and belief

Place: Chennai
Date :14.06.2023

(V.KARTHIKAIRAJAN)
General Secretary

V. Ayyappan
~~(N.SUBRAMANIAN)~~
President

TO BE READ WITH MY REPORT
FOR C N JAYACHANDRAN & CO

(R MAHESWARI)
PARTNER
UDIN: 23210225BGUQCA9719

C.N. JAYACHANDRAN & CO. CHARTERED ACCOUNTANTS FRN: 001286S CATHOLIC CENTRE 64, ARMENIAN ST., CHENNAI-600 001.

ANTI CORRUPTION MOVEMENT
REG.NO.349/2001
NO.7, KAVERI STREET, GANDHI NAGAR,SALIGRAMAM,CHENNAI-600 093.
ADMN.OFF:NO.155,KONNU HIGH ROAD,AYANAVARAM,CHENNAI- 600 023.

BALANCE SHEET AS ON 31ST MARCH 2023

| LIABILITIES | | AMOUNT(RS) | ASSETS | | AMOUNT(RS) |
|---|---|---|---|---|---|
| GENERAL RESERVE: | | | FIXED DEPOSITS: | | |
| As per Last B/S. | -88,668 | | TNPF&IDC FD No.RAA36486 | 6,50,000 | |
| Add:Excess of Income | | | TNPF&IDC FD No.RAA36487 | 10,00,000 | |
| Over Expenditure | 4,167 | -84,501 | TNPF&IDC FD No.RAA363657 | 1,60,000 | |
| | | | TNPF&IDC FD No.RAA391268 | 1,00,000 | 19,10,000 |
| ADVANCE FROM MEMBERS | | | CASH & BANK BALANCES: | | |
| TOWARDS LIFE MEMBERSHIP: | | | Cash on Hand | | 2,177 |
| As per Last B/S | 9,46,555 | | | | |
| Add: Current year | 17,200 | 9,63,755 | Cash at Bank:-AYANAVARAM | | |
| | | | SBI A/C.No:10081976798 | | 33,379 |
| BUILDING FUND: | | | | | |
| As per Last B/S | | 1,84,213 | IOB A/C.No.41657 | | 3,65,835 |
| SPECIAL DONATION: | | | TDS on Bank FD | | 31,126 |
| Towards Corpus | | 12,00,000 | | | |
| Legal Fund | | 1,29,050 | Rental Advance | | 50,000 |
| TOTAL RS | | 23,92,517 | TOTAL RS | | 23,92,517 |

We declare that the particulars furnished above are true and correct to the best of our knowledge and belief

Place: Chennai
Date : 14.06.2023

(V.KARTHIKAIRAJAN)
General Secretary

~~(N.SUBRAMANIAN)~~ V. Ayyappan
President

TO BE READ WITH MY REPORT
FOR C N JAYACHANDRAN & CO

C.N. JAYACHANDRAN & CO. FRN: 001286S CATHOLIC CENTRE 64, ARMENIAN ST., CHENNAI-600 001 CHARTERED ACCOUNTANTS

(R MAHESWARI)
PARTNER
UDIN: 23210225BGUQCA9719

# கலியுகத்தில் நடக்கப் போகும் முக்கிய பதினைந்து கணிப்புகள்...

**5000 ஆண்டுகளுக்குமுன்பே கூறிய முன்னோர்கள்...**

நம் ரிஷிகளும் முனிவர்களும் எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை முன்கூட்டியே அறிந்திருந்தனர்... இது அவர்களின் அதீத அறிவாற்றலினால் அவர்கள் கண்டறிந்த உண்மைகள்...

- பாகவத புராணத்தின் இறுதி பாகத்தில் கலியுகத்தைப் பற்றிய சில அரிய தகவல்கள் நிறைந்துள்ளன...
- 5000 ஆண்டுகளுக்கு முன் வேதவியாசர் அருளிய ஓர் உத்தம நூலில் கலியுகத்தைப் பற்றிய குறிப்புகள் அத்தனையும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது மிகவும் வியக்கத்தக்க ஒன்றாகும்...

**ஆச்சரியப்பட தயாராக இருங்கள்!...**

1. கலியுகத்தின் தாக்கத்தால் அறநெறி, உண்மை, தூய்மை, பொறுமை, கருணை, ஆயுள்காலம், உடல்வலிமை, ஞாபகசக்தி ஆகிய அனைத்தும் மனிதர்களிடையே நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வரும். [பாகவத புராணம் 12.2.1]
2. கலியுகத்தில், பொருட்செல்வம் மட்டுமே ஒரு மனிதனின் மதிப்பை அளவிடும். மற்றபடி ஒருவனின் முறையான பழக்கவழக்கங்கள் மற்றும் நல்ல பண்புகள் அடிப்படையில் அவன் மதிப்பிடப்படுவதில்லை. மேலும், சட்டமும் நீதியும் ஒருவனின் அதிகாரத்தின் அடிப்படையிலே செயல்படும். (பாகவத புராணம் 12.2.2]
3. ஆண்களும் பெண்களும் வெறும் உடலுறவுக்காக மட்டுமே தொடர்பு கொண்டிருப்பார்கள். தொழில்துறைகளில் வெற்றி என்பது வஞ்சகமும் சூழ்ச்சியும் நிறைந்திருக்கும். [பாகவத புராணம் 12.2.36)
4. . ஒருவரின் புறத்தோற்றத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு அவரை பண்டிதர் என்று மக்கள் நம்புவார்கள். கண்களால் காணும் வித்தைகளுக்கு மயங்கி தவறான போலி குருக்களை நம்பி வழிதவறி செல்வார்கள். வெறும் வாய் வார்த்தைகளில் ஜாலங்கள் செய்பவர் கற்றுணர்ந்த பண்டிதராக போற்றப்படுவார். [பாகவத புராணம் 12.2.4]
5. கலியுகத்தின் பிடியில் சிக்கியிருக்கும் சிலர் பொருட்செல்வம் (பணம்) இல்லாதவனைத் தீண்டத்தகாதவன் என்று வெறுத்து ஒதுக்குவர். குளிப்பதாலும் அலங்காரம் செய்து கொள்வதாலும் மட்டுமேஒருவன் சுத்தமடைந்து விட்டான் என எண்ணிக் கொள்வான். [பாகவத புராணம் 12.2.5]
6. அலங்காரம் செய்தவனெல்லாம் அழகானவன் என்றறியப்படுவான். முரட்டுத்தனமான பேச்சு உண்மை என்று எளிதில் நம்பப்படும். வயிற்றை நிரப்புவது மட்டுமே வாழ்க்கையின் குறிக்கோளாக அமையும். பல மதங்கள் ஆட்களை சேர்த்துக் கொள்வதையும் பெருக்கிக் கொள்வதையும் மட்டுமே லட்சியமாக கொண்டிருக்கும். [பாகவத புராணம் 12.2.6]
7. உலகத்தில் ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் நிறைந்துவிடுவர்.. தன் சமூகத்தினிடையே தன்னை பலமானவன் என்று காட்டிக் கொள்பவன் அரசாளும் அதிகாரத்தைப் பெற்றிடுவான். (பாகவத புராணம் 12.2.7]
8. ஊழல் நிறைந்த அரசாங்கத்தால் நியாயமற்ற கொடுமையான வரிகள் மக்கள் மீது வசூலிக்கப்படும். இதனால் மக்கள் உண்ண உணவின்றி இலை, வேர், விதை போன்றவற்றை உண்ணத் தொடங்குவார்கள். (அரசின் அலட்சியப் போக்கினால்) கடுமையான பருவநிலை மாற்றத்திற்கு ஆளாகி துன்பமிகு வாழ்க்கையில் சிக்கிக்கொள்வார்கள். (பாகவத புராணம் 12.2.9]
9. கடுங்குளிர், புயல், கடும்வெப்பம், கனமழை, உறைபனி, வெள்ளம் போன்ற பல இயற்கை பேரிடர்களில் சிக்கி மக்கள் தவிப்பார்கள். இதனால் பசி, தாகம், நோய், பயம், சச்சரவு போன்ற கடுந்துன்பங்களிலும்சிக்கிக் கொள்வார்கள். [பாகவத புராணம் 12.2.10]
10. கலியுகத்தின் கொடுமை அதிகரிக்கையில், மனிதர்களின் சராசரி ஆயுள் காலம் 50 ஆண்டுகளாக குறையும். (பாகவத புராணம் 12.2.11]
11. தன்னை ஊட்டி வளர்த்த பெற்றோர்களை இறுதிகாலத்தில் கவனித்துக் கொள்ளும் தர்மத்தை மகன் மறப்பான். [பாகவத புராணம் 12.3.42]
12. பொருளுக்காக மனிதன் இன்னொரு மனிதனிடம் வெறுப்பு, பொறாமை போன்ற உணர்ச்சிகளை வளர்த்துக் கொள்வான். நட்பு என்ற உயரிய பண்பை போற்றாமல், தன் சுற்றத்தாரையும் உறவினரையும் கூட கொல்லத் துணிவான். [பாகவத புராணம் 12.3.41]

13. வெறும் பகட்டுக்காகவும் புகழுக்காகவும் மட்டுமே தானம் அளிப்பார்கள். தற்பெருமைக்காக மட்டுமே நோன்பு இருப்பார்கள். தர்மத்தைப் பற்றிய அறிவாற்றல் இல்லாதவர்கள் மதங்களை உருவாக்கி மக்களைக் கவர்ந்து தவறான அதர்ம பாதைக்கு இழுத்துச் செல்வார்கள். [பாகவத புராணம் 12.3.38]

14. தனக்கு இனி பயன்பட மாட்டான் என்ற பட்சத்தில் தனக்கு இத்தனை காலமாக உழைத்து தந்த தொழிலாளிகளை முதலாளி கைவிடுவான். இத்தனை காலம் பால் கொடுத்த பசு பால் கொடுப்பதைக் குறைந்துவிட்டால் அப்பசுக்களும் கொல்லப்படும். நன்றிக் கடன் மறக்கப்படும். [பாகவத புராணம் 12.3.36]

**15.** நகரங்களில் கொள்ளையர்கள் அதிகரிப்பர்; வேதங்கள் கயவர்கள் தங்கள் சுயனலக் கோட்பாடுகளைப் பரப்ப பொய் யான முறையில் மொழிப் பெயர்க்கப்படும். அரசியல்வாதிகள் மக்களை மெல்லமெல்ல பலவிதமாக கொடுமை செய்வார்கள். போலி ஆசாரியர்கள் தோன்றி பக்தர்களை உபயோகப் படுத்தி தங்கள் வயிறுகளையும் காமத்தையும் பூர்த்திசெய்துகொள்வார்கள். (பாகவத புராணம் 12.3.32]

- கலியுகம் துன்பங்கள் நிறைந்தது. ஆனாலும் நான்கில் ஒரு பங்கு தர்மம் உள்ளது. கலியுக துன்பங்களில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள கண்டிப்பாக நமக்கு ஈஸ்வரனின் துணை தேவை.
- மழையினில் குடைபோல, இறைவனிடம் காட்டும் பக்தி இத்துன்பங்கள் நம்மீது படாமல் பாதுகாக்கும்.
- மனத்தை உறுதியாகவைத்துக் கொள்ள தியானமும், உடலை வலிமையாக வைத்துக் கொள்ள யோகமும், செயலை தூய்மையாக வைத்துக் கொள்ள சுயநலமற்ற சேவைகளும் புரியவேண்டும்.
- கலியுக துன்பங்களில் நம்முடைய தர்மங்களை மறந்துவிட கூடாது.
- கலியுகத்தின் நடுவில் ஒரு பொற்காலம் மலரும் என கூறப்படுகின்றது.
- இப்போது நாம் எல்லோரும் அந்த பொற்காலத்திற்காக உலகத்தை தயார் செய்யவேண்டும்.
- அனைத்தையும் அச்சமின்றி மிகவும் துணிவாக எதிர்கொள்ளவேண்டும்!.

**மிகவும் தெளிவான சிந்தனையோடு செயல்படவேண்டும்.**
**ஒருபோதும் கடவுளை மறவாமல் இருக்கவேண்டும்.**

---

## வாராக் கடனை தள்ளுபடி செய்வது தொடர்பான ரிசர்வ் வங்கியின் புதிய திட்டம் தவறானது: வங்கி ஊழியர்கள் அமைப்பு

வங்கிகளின் வாராக் கடன் சிக்கலைத் தீர்ப்பதற்கு சமீபத்தில் ரிசர்வ் வங்கி புதிய நடைமுறையை ஜூன் 8ம் தேதி அறிவித்தது. அதன்படி, கடனை திருப்பிச் செலுத்தாமல் இருக்கும் நிறுவனத்துடன் சமரச முறையில் பேச்சுவார்த்தை நடத்தி கடன்களை வரைமுறைக்கு உட்பட்டு தள்ளுபடி செய்யலாம் என்று ரிசர்வ் வங்கி குறிப்பிட்டது.

இந்நிலையில், இந்த நடைமுறை வங்கிகளில் கடன் பெற்று மோசடி செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமையும் என்றும் வங்கிகள் மீதான மக்களின் நம்பிக்கையைக் குலைக்கும் என்றும் அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பும் அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கமும் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில், "வங்கி என்ற அமைப்பில் முக்கிய அங்கமாக இருக்கும் நாங்கள், வங்கியில் கடன் பெற்று மோசடி செய்யும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ரிசர்வ் வங்கி அறிவித்துள்ள சமரச வழிமுறையானது, வங்கி மீதான மக்களின் நம்பிக்கையைத் தகர்க்கும். வங்கியில் கடன் பெற்று முறையாக திருப்பிச் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு ஏமாற்றத்தைத் தரும். தவிர, மோசடியாளர்கள் தொடர்ந்து மோசடி செய்வதற்கு ஊக்கம் அளிக்கக் கூடியதாக அமையும்.

வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில், தீவிர கட்டுப்பாடுகள் இருந்தால்தான், கடன் பெற்றவர்கள் முறையாக செயல்படுவார்கள். அவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டு அவர்களின் கடனை தள்ளுபடி செய்வது தவறான முன்னுதாரணமாக அமையும். எனவே, ரிசர்வ் வங்கி இந்த முடிவை திரும்பப் பெற வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

ஈரோடு

# லஞ்சம் வாங்கிய மின் வாரிய போர்மேனுக்கு 3 ஆண்டு சிறை

கொடுமுடி, ஜூன் 13–

வீட்டு மின் இணைப்புக்கு லஞ்சம் வாங்கிய மின் வாரிய போர்மேனுக்கு, ஈரோடு நீதிமன்றம், மூன்றாண்டு சிறை தண்டனை விதித்தது.

ஈரோடு மாவட்டம், கொடுமுடி அடுத்த தாமரைப் பாளையம், அண்ணாமார் கோவில் வீதியைச் சேர்ந்தவர் ரகுநாத், 50; கூலி தொழிலாளி. தாமரைப் பாளையம் மின் வாரிய அலுவலக போர்மேனாக பணியாற்றியவர் விஸ்வநாதன்.

இவரிடம், வீட்டுக்கு மின் இணைப்பு கோரி, 2011 ஜனவரியில் அணுகினார். இதற்கு, 1,000 ரூபாய் லஞ்சமாக கேட்கவே, ஈரோடு மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறையில் ரகுநாத் புகாரளித்தார்.

இதையடுத்து, 2011 பிப்., 15ல் லஞ்ச பணத்தை கொடுத்தபோது, விஸ்வநாதனை கையும், களவுமாக போலீசார் கைது செய்தனர். வழக்கு, ஈரோடு தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்தது.

நீதிபதி சரவணன் நேற்று விஸ்வநாதனுக்கு இரு பிரிவுகளில், தலா மூன்றாண்டு சிறை தண்டனை, 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார். தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிட்டார்.

ஆபாச வீடியோ புகார் மீது நடவடிக்கை எடுக்காத

# காரைக்கால் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டராக பதவி இறக்கம்

## போலீஸ் டி.ஜி.பி. நடவடிக்கை

புதுச்சேரி, ஜூன் 22–

ஆபாச வீடியோ புகார் மீது நடவடிக்கை எடுக்காத காரைக்கால் நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவக்குமார், சப்-இன்ஸ்பெக்டராக பதவி இறக்கம் செய்யப்பட்டார்.



சிவக்குமார்

### இன்ஸ்பெக்டர் பணியிடை நீக்கம்

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் நகர போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தவர் சிவக்குமார். கடந்த ஆண்டு காரைக்கால் போலீஸ் நிலையத்தில் மயிலாடுதுறையை சேர்ந்த பெண் ஒருவர் தனது செல்போன் எண்ணுக்கு ஆபாச வீடியோ அனுப்பியவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் கொடுத்தார். அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் இன்ஸ்பெக்டர் சிவக்குமார் இழுத்தடித்து வந்ததாக தெரிகிறது.

அதைபடுத்து அந்த பெண், தேசிய மகளிர் ஆணையத்திடம் இதுகுறித்து முறையிட்டார். இதையடுத்து மகளிர் ஆணைய உத்தரவுப்படி மயிலாடுதுறை அனைத்து மகளிர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், காரைக்கால் நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவக்குமார், ஆபாச வீடியோ அனுப்பிய கமாலுதீன் உள்பட 3பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

மேலும் தேசிய மனித உரிமை ஆணையம் அறிவுறுத்தலின்படி போலீஸ் டி.ஜி.பி. மோகன்குமார் லால் உத்தரவின்பேரில் இன்ஸ்பெக்டர் சிவக்குமார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

### பதவி இறக்கம்

மேலும் நிபந்தனை ஜாமீன் அளிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டதாகவும், கஞ்சா வழக்கில் பிடிபட்டவர்களை விடுவித்ததாகவும் இன்ஸ்பெக்டர் சிவக்குமார் மீது புகார்கள் எழுந்தன. இதுகுறித்து துறை ரீதியான விசாரணை நடைபெற்றது. இதில் சிவக்குமார் மீது கூறிய குற்றஞ்சாட்டுகள் உறுதியானது.

இதையடுத்து இன்ஸ்பெக்டர் சிவக்குமாரை சப்-இன்ஸ்பெக்டராக பதவி இறக்கம் செய்து போலீஸ் டி.ஜி.பி. மனோஜ்குமார் லால் நேற்று உத்தரவிட்டார். இது புதுவை காவல்துறை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பதவி இறக்கம் செய்யப்பட்ட சிவக்குமார் மீதான பணியிடை நீக்கநடவடிக்கை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கையும் களவுமாக பொறிவைத்து பிடிப்பது குறைகிறது

# டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மூலம் லஞ்சம் வாங்குவது அதிகரிப்பு

## லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளுக்கு கடும் சவால்

சென்னை, ஜூன் 23– [illegible]

# 2500 போலி பத்திரங்கள் ரத்து

**அமைச்சர் பி.மூர்த்தி தகவல்**

மதுரை, ஜூன் 25: தமிழகம் முழுவதும் 2,500 போலி பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை மாவட்டம் செட்டிகுளம் மற்றும் சக்கிமங்கலத்தில் நடத்தப்பட்ட பன்னோக்கு மருத்துவ முகாமை வணிக வரித்துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் அளித்த பேட்டி: ஆவண எழுத்தர்கள், சட்டப்படி பதிவு அலுவலகத்திற்குள் வரக்கூடாது. பதிவு செய்பவர் தவிர யாரும் அலுவலகத்திற்குள் வரக்கூடாது என்பது விதி. முறைகேடுகள், லஞ்ச குற்றங்களை தவிர்க்கவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ரூ.50 லட்சத்துக்கும் மேல் மதிப்புள்ள இடங்களை முன்கள ஆய்வு செய்வதற்கு பொறியியல் பிரிவில் புதிய இன்ஜினியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்பிறகு அந்த பதிவுகள் தொய்வின்றி நடைபெறும்.



போலி பத்திரப்பதிவுகளை பதிவாளர்களே ரத்து செய்யும் சட்டத்தின் கீழ் இதுவரை 14 ஆயிரம் புகார் மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 2,500 போலி பதிவுகள் குறித்து உரிய விசாரணை நடத்தி ரத்து செய்யப்பட்டுள்ளன. புகார் மனு மீது சம்பந்தப்பட்டவர்களுக்கு சட்டரீதியாக 3 முறை நோட்டீஸ் அனுப்பி, 120 நாட்கள் விசாரணை நடத்தி உரிய முறையில் பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார்.

ராமநாதபுரத்தில் நடந்த மண்டல அளவிலான சீராய்வுக்கூட்டத்தில் அமைச்சர் மூர்த்தி பேசுகையில், அதிமுக ஆட்சியில் பதிவுத்துறை முடங்கி கிடந்தது. திமுக ஆட்சி பொறுப்பேற்றதும் இந்தாண்டு மட்டும் பதிவுத்துறையில் ரூ.25,000 கோடியும், வணிக வரித்துறையில் ரூ.1,032 வருவாய் கிடைத்துள்ளது. இது அரசு நிர்ணயித்துள்ள இலக்கை விட கூடுதல் வருவாய் ஆகும் என்றார்.

வீட்டு மின் இணைப்புக்கு

# ரூ.1,000 லஞ்சம் வாங்கிய மின் ஊழியருக்கு 3 ஆண்டு சிறை

ஈரோடு நீதிமன்றம் தீர்ப்பு



சிறை தண்டனை பெற்ற மின் ஊழியர் விஸ்வநாதன்.

[illegible]

Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20


## எந்த புகாரை யாரிடம் கூறுவது?

| பிரச்சனைகள் | யாரிடம் முறையிடுவது |
|---|---|
| 1. நியாய விலைகடை பிரச்சனைகள் அனைத்திற்கும் பொருட்களை கட்டாய விற்பனை. | வட்டார வழங்கல் அதிகாரி தாலுகா அலுவலகம் |
| 2. நியாய விலைக்கடையிலிருந்து பொருட்கள் கடத்துதல், பொருட்களை திருடி விற்பது. | மாவட்ட வழங்கல் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் |
| 3. எடை அளவு குறைகள், பாக்கெட் பொருட்கள் கூடுதல் விலை விற்பது, தவறான எடைக்கற்கள், தராசு அளவினை குறைத்தல். | 1. எடைக் கட்டுப்பாடு அலுவலகம் 2. எடை அளவு கட்டுப்பாடு அலுவலர் (தொழிலாளர் நல அலுவலர்) |
| 4. மில் சீல் இல்லாத துணி வகைகள் போலி துணிகள், மலிவு விலை என்று தரமில்லாத துணி வகைகள் காலாவதியான துணிகள். | உதவி இயக்குனர், கைத்தறி மற்றும் துணிகள் துறை, .............................. மாவட்டம் |
| 5. கலப்படம் : உணவுபொருள், பாட்டிலில் அடைக்கப்பட்ட பழரசங்கள், எண்ணை மற்றும் அனைத்து உணவுப் பொருட்கள் மற்றும் துப்புரவுப் பணிகளில் குறைபாடுகள் | 1. நகராட்சி மற்றும் மாநகராட்சி - சுகாதார அலுவலர். 2. தாலுகா மற்றும் கிராமப் பகுதி இணை இயக்குநர், மாவட்ட சுகாதார அலுவலகம், |
| 6. உரம், பூச்சி மருந்து, விதைகள் தரக்குறைவு. | துணை வேளாண்மை இயக்குனர், வேளாண்மைத்துறை. |
| 7. சந்தேகப்படும் கலப்பட உணவுப் பொருட்களில் மாதிரி எடுத்து பரிசோதனைக்கு அனுப்ப, | அரசு பகுப்பு ஆய்வாளர், அரசு உணவு பரிசோதனைக்கூடம், கிண்டி, சென்னை-600 032. |
| 8. காற்று, நீர், அசுத்தக் கலப்படம், சுற்றுப்புறச் சூழல், சுகாதாரக் கேடுகள், தொழிற்சாலை, சிமெண்ட் சாராணம், புகை நாற்றம் ஆகியவை | 1. சுகாதார அலுவலர், நகராட்சி. 2. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மாசு கட்டுப்பாடு வாரியம் |
| 9. குலுக்கல் சீட்டு, பரிசு சீட்டுக் குலுக்கல், தவணை முறை குலுக்கல் திட்டம். | காவல்துறை ஆய்வாளர் (அப்பகுதி காவல் நிலையம்) |
| 10. பஸ் - ஸ்டாண்ட், சைக்கிள் நிறுத்தும் இடம், கட்டணக் கழிப்பிடம் ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேல் வசூலிக்கும் குற்றங்கள். | 1. ஆணையாளர், நகராட்சி அலுவலகம், 2. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகம். |
| 11. சினிமா கொட்டகைகளில் அனுமதிக்கப்பட்டதற்கு அதிக எண்ணிக்கை டிக்கெட்டுகள் விற்பது ஏ.சி. இயங்காதது கழிப்பிட அசுத்தங்கள் ஆகிய அனைத்தும் புகார்கள் | 1. வணிகவரி அலுவலர். 2. மாவட்ட ஆட்சித் தலைவர். 3. துணை உதவி ஆட்சித் தலைவர். |

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்


**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச் செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**



Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 July 2023
Due to corona published online)


**எலிமுயன் றனைய ராகி உள்ளதம்**
**வளன்வலி யுறுக்கும் உளம் இலாள ரோடு**
**இயைந்த கேண்மை இல்லா கியரோ!**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23


**Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI** and published through online on its behalf of **Thiru Govindasamy** (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai -600023 and printed by **Thiru G Parthasarathy at VPS PRINTERS**, No 292, TH Road, Chennai-600005; Editor: **Thiru V.Karthikai Rajan (8778312823)**